[26th April 1960

Women's education

*827-B Q.—Sri P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பெண்கள் கல்வி அபிவிருத்திக்காக 1958–59, 1959–60, வருடங்களில் சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்காரால் அளிக்கப்பட்ட மான்யத் தொகை எவ்வளவு ?

(ஆ) இத்தொகை மூலமாக பெண்கள் கல்வி அபிவிருத்திக்காக என்னென்ன காரியங்கள் நடைபெற்று வருகின்றன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) Under the Central Scheme for the Expansion of Girls' Education and Training of Women Teachers, the Government of India have conveyed their administrative approval for Rs. 8.13 lakhs as their share on the construction of quarters for women teachers employed in Elementary schools in rural areas for the years 1958–59 and 1959–60. They have also sanctioned Rs. 5.40 lakhs for provision of quarters for women teachers in rural areas under the 'Unemployment Relief Scheme' for 1958–59 and 1959–60.

(ஆ) Orders have been issued for the construction of 252 units of quarters, each unit consisting of two houses, and for 216 quarters under the 'Unemployment Relief Scheme' for women teachers employed in Elementary schools in rural areas.

Mr. SPEAKER : I think the next question also refers to the same subject. That may also be answered now.

Houses for women teachers

*827-C Q.—A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அசெம்பளியில் 22–9–58-ல் 392-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி பெண் ஆசிரியர்களுக்கு வீடுகட்ட அரசாங்கம் என்ன உதவி அளிக்க உத்தேசம் ?

(ஆ) எப்போது அது அமுலுக்கு வரும் ?

(இ) இதற்காக ஒதுக்கியிருக்கும் தொகை எவ்வளவு ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) & (ஆ) The Government have approved schemes for construction of quarters for women teachers employed in District Board Elementary schools in rural areas in districts other than the Kanyakumari district and in Elementary schools in the rural areas of the Kanyakuamri district. Government have permitted the construction during 1959–60 of 252 units of quarters, each unit to consist of two houses, under the Centrally Sponsored Scheme for expansion of Girls' Education and training of women teachers, and 216 quarters under the 'Unemployment Relief Scheme'.

(இ)—

	RUPEES IN LAKHS.
(i) Centrally Sponsored Scheme	13.26
(ii) Unemployment Relief Scheme	5.40

26th April 1960]

SRI P. G. MANICKAM : ஆரம்பப் பள்ளிகளில் ஒன்று முதல் மூன்ருவது வகுப்பு வரையில் பெண்களேயே ஆசிரியைகளாக நியமிக்க வேண்டுமென்று சட்டசபை கல்வி ஆராய்ச்சி குழுவினருடைய சிபார்ஸை அரசாங்கம் ஆமோதித்திருக்கிறது. ஆகவே பெண்கள் ஆசிரியர் பள்ளிகளை அதிகமாக ஆக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அதோடு அமைச்சர் அவர்களுக்கு மத்திய அரசாங்கம் தெரிவித்திருப்பதை நான் இப்பொழுது ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எவ்வளவு தொகை தேவையானுலும் பெண்கள் அபிவிருத்திக்காக கொடுக்கத் தயாராகயிருக்கிருேம் என்று சொல்லியிருப்பதை ஞாபகப்படுத்துகிறேன். ஆகவே பெண்கள் நலனுக்காக ஆரம்பப் பயிற்சி பள்ளிகளை அதிகமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது, வீடு கட்டும் திட்டம். கல்வி மான்யம் வருகிறது, அப்பொழுது சான்ஸ் கிடைத்தால் பேசலாம்.

SRI A. VEDARATHNAM : பெண் ஆசிரியைகளுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் இது, ஜில்லா போர்ட் பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்கு மட்டுமா அல்லது அரசாங்க உதவி பெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியைகளுக்கும் இது விஸ்தரிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது எடுத்துக் கொண்டிருப்பது, 250 யூனிட்கள், 500 பேர்களுக்கு. இன்னென்று, 216. ஜில்லா போர்ட் பள்ளிகள், அரசாங்க உதவி பெறும் பள்ளிகள் நிறைய இருக்கின்றன. இது தீர்ந்தால் பின் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க முயற்சி செய்யலாம்.

SRI R. SRINIVASA IYER : 1959–60-ல் சில வீடுகள் கட்ட பணம் ஒதுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எந்தக் கிராமப்புறங்களில் இந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது, அல்லது கட்டப்பட இருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனி கேள்வி வேண்டும்.

SRI A. GOVINDASAMY : பெண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டுவதற்காக 2,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிருர்கள். ஆனல் நிலத்தை கிராமத்தார் தானமாக தர வேண்டுமென்று வற்புறுத்தப் படுவதால் பல இடங்களிலும் பள்ளிக்கூடங்கள் கட்ட ஜில்லா போர்ட் சாங்க்ஷன் செய்தும் கூட கிராமத்தார் வீடு கட்டுவதற்கு நிலம் இனமாக கொடுக்காததால் அது தடைபடுவது தெரியுமா ? ஆகவே நிலத்தை அரசாங்கமே வாங்கிக் கொடுக்க முயற்சிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படி எனக்கு தகவல் இல்லை நிலம் கொடுப்பது மட்டும் அல்ல ஊர்க்காரர்களே கட்டிடமும் கூட கட்டி கொடுக்க முன் வந்திருக்கிருர்கள். அவர் ஊரில் நிலங்கூட கொடுக்க மாட்டேன் என்கிருர்களோ என்னவோ தெரியாது.

(Sri A. Govindasami rose . . .)

MR. SPEAKER: The hon. Member is not entitled to put the question unless I call him.

SRIMATHI KAMALAMBUJA AMMAL : ஜில்லா போர்ட் பள்ளிகளுக்கு மட்டும் இந்தத் திட்டமா ? எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இது நிறைவேறுவதற்கு எத்தனை ஆண்டுகளாகும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உடனடியாக கணக்குப் போட்டுச் சொல்ல முடியாது.

SRI J. MATHA GOWDER : : பெண் உபாத்தியாயர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில், வாகனவசதி அதிகமாக இல்லாத இடங்களில், நீலகிரிப் பிரதேசத்தில் வீடு கட்டும்போது, அங்கு வருடத்தில் ஆறு மாத காலம்

[26th April 1960

மழை பெய்வதால் அவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு நடந்து சென்று பாடங்கள் போதிப்பது என்பது கடினமாக இருக்கிறது. ஆகவே அங்கு அதிகப்படியான வீடுகள் கட்டிக் கொடுக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆறு மாதம் மழை பெய்கிறது என்றால், அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் அவர்கள் வீட்டிலேயே உட்கார்ந்து இருக்கவேண்டுமா என்று தெரியவில்லை.

Age of retirement of teachers

* 827-D *Q.*—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று 1959-ம் வருடம் மே மாதம் சேலத்தில் நடைபெற்ற 49-வது மாகாணக் கல்வி மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின், இத்தீர்மானத்தின் மீது அரசாங்கத்தாரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Yes, Sir.

(ஆ) No action was considered necessary pending the receipt of the report of the Pay Commission.

SRI A. GOVINDASAMY : 55 வயதுக்கு மேல் வேலை செய்யக் கூடிய உடல்நலம் இருந்தால் அவர்களை வேலை செய்ய அனுமதிக்க அரசாங்கத்திற்குள்ள ஆட்சேபணை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 20 வயது வந்த வாலிபர்கள் தயாராக காத்துக்கொண்டு இருப்பதால் 55 வயது வந்த கிழவர்கள் வாலிபர்களுக்கு இடம் கொடுத்தால் நல்லது என்ற கருத்து இருக்கிறது. பே கமிஷன் சிபார்சு பார்த்து இதுபற்றி ஆலோசனை செய்யப்படும்.

SRI K. VINAYAKAM: Sir, do the Government trust that the Pay Commission would have considered this aspect of the question? Do not the Government come to the conclusion that experienced teachers are any day much better to teach young plastic brains in the early stages, and if so, will the Government reconsider their decision and take steps to continue them even after the retirement age?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில சமயத்தில் அனுபவம் நல்லதும் கூடத்தான். சில சமயம் அனுபவம் வேறு வழியில் அமைந்திருந்தால் புதிதாக போடுவது நல்லது. ஆகவே, ஒரேமாதிரியாக அனுபவம் வேண்டும், வேண்டாம் என்று சொல்ல முடியாது. இதெல்லாம் அந்தந்த ஆளைப் பொறுத்திருக்கிறது. எந்தெந்தத் துறையில் இது அமுலுக்கு வரவேண்டும் என்பதையும் பொறுத்திருக்கிறது.

Grievances of Kundah Project workers

* 827-E *Q.*—SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the work charged and service Union and the National Project Workers' Union at Kundah regarding their grievances ;

(*b*) the nature of their grievances ; and

(*c*) the action taken thereon ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.